# என்னிடத்தில் வாருங்கள்

சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்;அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்;தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" என்று இயேசப்பா சொன்னாங்க.

ஏனென்றால் தேவனுடைய இராஜ்ஜியம் அவர்களுக்குறியது. ஆதலால் தம்முடைய சீடர்களிடத்தில் சிறுபிள்ளைகளை என்னிடத்தில் வருவதற்கு தடைப் பண்ண வேண்டாம் என்று சொன்னார். 2000 வருடத்திற்கு முன்பு இயேசு உலகத்திற்கு வந்தார். பரலோகத்திற்கு போவதற்கு முன்பு, அவர் மறுபடியும் திரும்பி வருவேன் என்று சொல்லியிருக்கிறார்! அவர் திரும்ப வரும் போது இந்த உலகத்தை ஆட்சி செய்கிற வல்லமையுள்ள இராஜாவாக திரும்ப வருவார்.

இயேசு திரும்பவும் வருவதற்கு முன்பதாக இந்த உலகத்தில என்ன நடக்கும் என்று சொல்லியிருக்கிறார். அவருடைய வருகையின் அடையாளங்களை நீ கவனித்து அறிந்துக்கொள்ள ஆசைப்படுகிறார், ஏனென்றால் இயேசுவின் வருகைக்கு நீ ஆயத்தப்பட வேண்டும்.



"ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து திரும்ப வருவார் என்பதை எப்படி நாம் அறிந்துக் கொள்ள முடியும்? கீழ்காணும் தீர்க்கதரிசனங்களை படித்து அறிந்துக் கொள்ளுங்கள்!"

**1 தேவாலயம் இடிக்கப்படுதல்**

இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவர் எருசலேம் தேவாலயத்தைக் காட்டி, போதகரே, இந்த ஆலயம் எவ்வளவு அழகாக இருக்கிறது? என்று சொன்னார். அதற்கு 'இயேசு, ஒரு நாள், ஒரு கல்லின் மேல் ஒரு கல் இல்லாதபடி போகும் என்று சொன்னார். **"கிபி 70ஆம் வருடத்தில் அப்படியே நிறைவேறியது!"**

(மத் 24:1–2;மாற் 13:1–2; லூக் 21:5–6)

**2 அவருடைய வருகையின் அடையாளங்கள்**

இயேசு கிறிஸ்து சீடர்களுடன் ஒலிவமலையில் தேவாலயத்தைப் பார்த்து உட்கார்ந்து இருந்த போது, சீடர்கள் அவரை நோக்கி, இவைகள்எப்போது நடக்கும், உம்முடைய வருகைக்கும் உலகத்தின் அழிவிற்கும் அடையாளம் என்ன? என்று கேட்டார்கள் (மத் 24:3; லூக் 21:7).

**3 பொய்யர்கள் எழும்புவார்கள்**

இயேசு,"ஒருவரும் உங்களை ஏமாற்றாதபடி எச்சரிக்கையாயிருங்கள். அநேகர் நானே இயேசு என்று பொய் சொல்வார்கள், ஆனால் அவர்களை நம்பாதீர்கள் என்று சொன்னார்" (மத் 24:4–5; மாற் 13:12–13; லூக் 21:8).

**4 யுத்தங்கள்**

யுத்தத்தைப் பற்றியும், ஜனங்கள் சண்டையிட்டு கொள்வதையும் கேள்விப்படும் போது பயப்படாதீர்கள்; இவைகள் எல்லாம் நடக்க வேண்டியவைகளே, ஆனால் முடிவு உடனே வராது" (மத் 24:6; மாற் 13:7; லூக் 21:9).

**5 மிகப் பெரிய அசைவுகள்**

இயேசு, "தேசங்களுக்கு விரோதமாய் தேசங்கள் சண்டையிட்டுக்கொள்ளும், பல இடங்களில் பூமியதிர்ச்சிகளும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் உண்டாகும். வானத்திலிருந்து பயங்கரமான தோற்றங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாகும். இவைகள் அனைத்தும் வேதனைகளுக்கு ஆரம்பம்" என்று சொன்னார் (மத் 24:7; மாற் 13:8; லூக் 21:10–11).

**6 கிறிஸ்தவர்களை கொடுமை செய்தல்**

"நீங்கள் கைது செய்யப்படுவீர்கள், துன்பப்படுத்தப்பட்டு கொல்லப்படுவீர்கள். நீங்கள் என்னை பின்பற்றுவதால் உலகத்தில் எல்லோராலும் விரோதிக்கப்படுவீர்கள். நீங்கள் என்னைக் குறித்து சொல்லும்படிக்கு இராஜாக்களுக்கு முன்பாகவும் அதிகாரிகளுக்கு முன்பாகவும் நிறுத்தப்படுவீர்கள்" (மத் 24:9,மாற் 13:9, லூக்21:12–13). நீங்கள் கைது செய்யப்படும் போது கவலைப்படாதீர்கள்! என்ன பதில் சொல்லவேண்டும் என்று யோசனை செய்யாதிருங்கள். நீங்கள் பேச வேண்டிய நேரத்தில் பரிசுத்த ஆவியானவரே உதவி செய்வார். எதிரிகள் கண்டு ஆச்சரியப்படும்படி ஞானமுள்ள வார்த்தைகளை உங்களுக்கு கொடுப்பார் (மாற் 13:11; லூக் 21:14–15).

**7 குடும்பங்களில் காட்டிக் கொடுத்தல்**

உங்கள் குடும்பத்தினரே உங்களுக்கு விரோதமாக எழும்புவார்கள், பிள்ளைகள் அப்பா, அம்மாவுக்கு விரோதமாக எழும்பி அவர்களை கொலை செய்வார்கள். என் நாமத்தினிமித்தம் எல்லோராலும் பகைக்கப்படுவீர்கள். ஆனாலும் உங்கள் தலை முடியில் ஒன்றாகிலும் அழியாது. நீங்கள் உறுதியாக நிலைத்திருந்தால் நீங்கள் காப்பாற்றப்படுவீர்கள் (மத் 24:9–10; லூக் 21:16–19).

**8 அன்பு குறைந்து போகுதல்**

அக்கிரமம் அதிகமாவதால் எல்லோருடையஅன்பும் குறைந்து போகும் ஆனால் முடிவு மட்டும் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான் (மத் 24:12–13).

**9 இராஜ்ஜியத்தின் சுவிசேஷம்**

இராஜ்ஜியத்தினுடைய இந்த சுவிசேஷம் சகல ஜனங்களுக்கும் முதலில் சாட்சியாக பிரசங்கிக்கப்பட வேண்டும், அதன் பிறகு முடிவு வரும் (மத் 24:14; மாற் 13:10).

**10 எருசலேம் சூழப்படுதல்**

எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருக்கிறதை நீங்கள் காணும்பொழுது, அதனுடைய அழிவு அருகில் இருக்கிறதென்று தெரிந்துக்கொள்ளுங்கள். தானியேல் தீர்க்கதரிசியால் சொல்லப்பட்ட பாழாக்கும் அருவருப்பை நீங்கள் காணும்போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் ஓடி ஒளிந்துக் கொள்வார்கள். யுத்தம் ஏற்படும். அந்த வேளை நிறைவேறும்மட்டும் எருசலேம் எடுத்துக்கொள்ளப்படும் (லூக் 21:20–21).

**11 கஷ்டத்தின் காலம்**

இதுவரை சம்பவித்திராத மிகுந்த கஷ்டம் இந்த பூமியில் ஏற்படும். தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும். இந்த எல்லா அடையாளங்களும் நடக்கும் போது, கர்த்தர் தம்முடைய விரோதிகளை தண்டிக்கிறார் என்பதை அறிந்துக் கொள்ளுங்கள்(மத் 24:21–22 ; மாற் 13:19–20; லூக் 21:22–23).

**12 பொய்யான கிறிஸ்துக்கள்**

இதோ, கிறிஸ்து இங்க இருக்கிறார், அல்லது அவர் அங்க இருக்கிறார் என்று யாராவது சொன்னால் அதை நம்பாதீர்கள்பொய்யான கிறிஸ்துக்களும், பொய் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கிறிஸ்துவை நம்புகிறவர்களையே ஏமாற்றத்தக்கதாக அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள். ஆகவே எச்சரிக்கையாக இருங்கள்! அதோ இயேசு வனாந்திரத்தில் இருக்கிறார் என்று சொன்னாலும் போகாதீர்கள். மின்னல் வானத்தின் கிழக்கு திசையில் தோன்றி மேற்கு திசை மட்டும் பிரகாசிப்பது போல இயேசு கிறிஸ்துவின் வருகையும் இருக்கும்

(மத் 24:23–24; மத் 24: 26–27; மாற் 13:21–23; லூக் 17:23–24).

**13 வானத்தில் தோன்றும் அடையாளங்கள்**

வானத்தில் அடையாளங்கள் தோன்றும், சூரியனும், சந்திரனும் ஒளியைக்

கொடாதிருக்கும் நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும். வானத்தின் சத்துவங்களும் அசைக்கப்படும். கடலில் தோன்றும் அலைகளின் சீற்றங்களால் பூமியிலுள்ள தேசங்களில் அமைதி இருக்காது. பூமியில் ஏற்படும் பயங்கரங்களால் ஜனங்கள் சோர்ந்துப் போவார்கள் (மத் 24:29; மாற் 13:24–25; லூக் 21:25–26).

### 14 மனுஷ குமாரனுடைய அடையாளம்

அதன் பிறகு மனுஷ குமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். மேகங்களின் மீது அவர் வருகிறதைக் கண்டு பூமியின் எல்லா ஜனங்களும் அழுது சத்தமிடுவார்கள். பலமாய் கேட்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்பி அவரால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை தம்முடன் சேர்த்துக்கொள்வார். இவைகள் எல்லாம் சம்பவிக்கும்போது நிமிர்ந்து பாருங்கள் அவர் உங்களுக்காக வருகிறார்! (மத் 24:30–31;மாற் 13:26–27;லூக் 21:27–28).

### 15 தேவனுடைய இராஜ்ஜியம்

இயேசு சொன்னார், அத்திமரத்தை பார்த்து கற்றுக்கொள்ளுங்கள். அதிலே இளங்கிளைதோன்றி, துளிர்விடுவதைப் பார்க்கும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறியுங்கள். இவைகளை நீங்கள் பார்க்கும் போது, தேவனுடைய இராஜ்ஜியம் சமீபமாய் இருக்கிறது என்று அறிந்துக் கொள்ளுங்கள். பரலோக பிதாவை தவிர அந்த நாளையும் அந்த நேரத்தையும் ஒருவராலும் தெரிந்துக் கொள்ள முடியாது (மத் 24:36; மாற் 13:32).

### 16 நோவா மற்றும் லோத்துவின் காலம்

நோவாவின் காலத்தில் நோவா பேழைக்குள் நுழையும் வரைக்கும் ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், திருமணம் செய்தார்கள். வெள்ளம் வந்து அவர்கள் அனைவரையும் அழிக்கும் என்பதை அவர்கள் அறியாதிருந்தார்கள். லோத்துவின் காலத்திலும் அப்படியே நடந்தது; அக்கினி இறங்கி வந்து அவர்களை அனைவரையும் அழிக்கும் வரைக்கும் ஜனங்கள் கொண்டாடினார்கள், வாங்கினார்கள், விற்றார்கள். இயேசு கிறிஸ்துதிரும்ப வருகிற நாளிலும் இதே போல் நடக்கும். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான், தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை காப்பாற்றிக்கொள்வான்

(மத் 24:37–39; லூக்17:26–30; 32,33).

### 17 ஒருவர் எடுத்துக்கொள்ளப்படுதல் மற்றும் ஒருவர் கைவிடப்படுதல்

அந்த இராத்திரியில் இரண்டு பேர் ஒரே கட்டிலில் தூங்கிக்கொண்டிருப்பார்கள்; ஒருவன் எடுத்துக்கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான். இரண்டு பெண்கள் ஒன்றாக உட்கார்ந்து வேலை செய்து கொண்டிருப்பார்கள்: ஒருத்தி எடுத்துக்கொள்ளப்படுவாள் மற்றவள் கைவிடப்படுவாள். வயலில் இருக்கிற இரண்டு மனிதர்களில் ஒருவன் எடுத்துக்கொள்ளப்படுவான்மற்றவன் கைவிடப்படுவான். "எங்கே ஆண்டவரே?" இயேசு சொன்னார், 'பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்'(லூக்17:34–36).

### 18 விழித்திருந்து ஜெபியுங்கள்

கவனமாக இருங்கள். விழித்திருந்து ஜெபியுங்கள். இது ஒரு மனிதன் வெளி யூருக்கு பயணம் செய்வது போன்றது. அவன் வீட்டிலிருந்து புறப்படுகையில், தன்னுடைய ஊழியக்காரர்களுக்கு ஜாக்கிரதையாய் காவல் காக்கும்படிக்கு பொறுப்புகளைக் கொடுத்துவிட்டு செல்வான். ஆண்டவர் வருகிற நாளை நீ அறியாதபடியினால் அதேபோல் கவனமாக இருக்க வேண்டும் (மாற் 13:34–36).

### 19 ஆயத்தப்படுங்கள்

திருடன் திருட வருவதை வீட்டின் எஜமான் அறிந்திருந்தால், அவன் விழித் திருந்து, அவனுடைய வீட்டை பாதுகாப்பான். நீங்கள் நினைக்காத நேரத்திலே ஆண்டவராகிய கிறிஸ்து வருவார். ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள். உங்கள் இருதயத்தை காத்துக்கொள்ளுங்கள். அப்படி செய்வதினால் கேளிக்கை, மதுபானம் மற்றும் உலக கவலை களால் நிறைந்தவர்களாய் இருக்க மாட்டீர்கள். நீங்கள் ஆயத்தமில் லாமல் இருந்தால் ஆண்டவர் திரும்ப வருவதை விரும்பமாட்டீர்கள். அவர் வரும் வேளையை அறியாதிருக் கிறபடியால் விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். பூமியில் வாழ்கின்ற அனைவரின் மேலும் அவர் வருகை ஒரு கண்ணியைப் போல வரும். இவைகளெல்லாவற்றிற்கும் தப்பித்து ஆண்டவருக்கு முன்பாக நிற்கத்தக்கதாக எப்பொழுதும் விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்

(மத் 24:43–44; மாற் 13:33; லூக் 21:34–36).

**மகா இராஜா ஆண்டவராகிய**
**இயேசு கிறிஸ்து**
**மகா வல்லமையுடனும்**
**மகிமையுடனும் அதி சீக்கிரத்தில்**
**திரும்பி வரப்போகிறார்.**
**தேவனுக்கு பயந்து,**
**அவரை மகிமைப்படுத்துங்கள்,**
**அவர் நியாயத்தீர்ப்புக்**
**கொடுக்கும் வேளை வந்தது;**
**வானத்தையும் பூமியையும்**
**உண்டாக்கினவரையே**
**தொழுது கொள்ளுங்கள்.**
**இனி காலம் செல்லாது!**
**பரலோக இராஜ்ஜியம்**
**சமீபமாயிருக்கிறது.**
**மனந்திரும்புங்கள்.**
**இந்த சுவிசேஷத்தை**
**விசுவாசியுங்கள்.**
**உங்கள் தேவனாகிய கர்த்தரை**
**சந்திக்க ஆயத்தப்படுங்கள்!**



# இயேசுவின் வருகையின் அடையாளங்கள்

சிறுவர் | தமிழ்